



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 296 19.04.2026 SUNDAY CHITHIRAI: 6 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 296 19.04.2026 ஞாயிற்றுக்கிழமை சித்திரை : 6 விலை : ரூ.5/-


## தமிழக மக்களை சொந்த நாட்டிலேயே

# "பாஜக அகதிகளாக்கப் பார்த்தது"

சென்னை: ஏப்.19-

"தொகுதி மறுவரையறை மசோதா மூலம் தமிழ்நாட்டு மக்களைச் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப் பார்த்த பாஜகவுக்கும், அவர்களுடைய ஏவல் அடிமைகளான அதிமுக வுக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மறக்கவே முடியாத மாபெரும் தோல்வியைக் கொடுப்போம்," என்று தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்ததையடுத்து, இந்தியா கூட்டணி கட்சிகள் உள்ளிட்ட அனைத்து எதிர்கட்சித் தலைவர்கள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் ஆதரவு அளித்த தமிழ்நாட்டு மக்களுக்கும் நன்றி தெரிவித்து திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறி இருப்பதாவது: 'Delimitation' எனும் கருப்புச் சட்டத்துக்கு எதிரான நம்முடைய போராட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. இந்த ஆபத்தை ஒரு வருடத்திற்கு முன்பே அறிந்து, இந்த வெற்றியைப் பெறுவதற்கான அனைத்துப் பணிகளையும் அப்போதே நாம் தொடங்கினோம்.

மாநில முதல்வர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம் தொடங்கி, நேற்று முன்தினம் கருப்புக் கொடி ஏற்றி, கருப்புச் சட்ட நகலைக் கொளுத்தினேன்! அதேபோல், நேற்று திண்டுக்கல்லில் வெற்றிக்கான வெடியைக் கொளுத்தினேன்! தீ பரவட்டும் என்று சொன்னேன். அது நாடாளுமன்றம் வரை பற்றிக் கொண்டது.

50, 60களில் பார்த்த பழைய திமுகவைப் பார்க்க வேண்டி வரும் என்று எச்சரித்தேன். "அப்படி என்றால் என்ன?" என்று கேட்ட சில அரைவேக்காடுகளுக்கு, "இதுதான்டா திமுக பாருங்கள்" என்று நேற்று ஸ்ட்ராங்காகக் காட்டி யிருக்கிறோம்.

தொகுதி மறுவரையறை என்ற பெயரில், முழுக்க முழுக்க பாஜக வுக்குச் சாதகமாகக் கொண்டு வரப்பட்ட கருப்புச் சட்டத்தை, நாடாளுமன்றத்தில் தோற்கடித்த அனைவருக்கும் தமிழ்நாட்டு முதல்வராக என்னுடைய நன்றி! நன்றி! நன்றி!

முக்கியமாக, இதில் முழுக்க முழுக்க என்னுடன் நின்ற தமிழ்நாட்டு மக்களுக்குத்தான் முதலில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்ல வேண்டும்!

பெண்களுக்கான இடஒதுக்கீடு என்ற மாறுவேடத்தில் இந்தச் சட்டத்தை பாஜக கொண்டு வரப் பார்த்தார்கள். ஆனால், இந்த ஏமாற்றுத் திட்டத்தை முன்னின்று தோற்கடித்ததே பெண்கள்தான்! அவர்களுக்கு என்னுடைய சல்யூட்!

இந்தியா கூட்டணிக் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்களும் ஒன்றாகச் சேர்ந்து நின்ற காரணத்தினால், இது சாத்தியமாகியிருக்கிறது. வடக்கு ரூ தெற்கு என நமக்குள்ளே பிளவை ஏற்படுத்தி, சண்டை போட்டுக் கொள்ள வைக்கலாம் என்று நினைத்தவர்களுக்குச் சரியான



சம்மட்டியடி கிடைத்திருக்கிறது. 12 ஆண்டுகளில் முதல் முறையாகப் பிரதமர் மோடி அரசு கொண்டு வந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதா தோல்வியடைந்திருக்கிறது!

இது தொடக்கம்தான்! பாஜக இனி நாடு முழுக்கப் பெறப் போகும் தோல்விகளுக்கான தொடக்கம் இது! எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைக்கான தொடக்கம் இது! நாம் ஒன்றுபட்டால் வெற்றி உறுதி என நான் தொடர்ந்து சொல்லி வந்தேன். அது உண்மை எனக் காட்டியிருக்கும் தொடக்கம் இது!

இந்த நேரத்தில், நேற்று நாடாளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் "பெண்கள் இடஒதுக்கீட்டுக்கும் இந்த மசோதாவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இது ஒரு தேச விரோதச் சட்டம். இதை அனுமதிக்க மாட்டோம். இதை அனைவரும் சேர்ந்து தோற்கடிப்போம்" எனத் தெளிவான உணர்வுகளை வெளிப்படுத்திய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் அன்புச் சகோதரர் ராகுல் காந்தி, காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே ஆகியோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் மட்டுமல்ல, திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி, சமாஜ்வாடி தலைவர் அகிலேஷ், ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கேஜ்ரிவால், ராஷ்டிரிய ஜனதா தள செயல் தலைவர் தேஜஸ்வி, தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே, பிஜு ஜனதா தள தலைவர் நவீன் பட்நாயக், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் ஹேமந்த் சோரன், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா, சிவ சேனா தலைவர் உத்தவ் தாக்கரே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. பேபி, பி.ஆர்.எஸ் கட்சித் தலைவர் கே. சந்திரசேகர ராவ், சிரோமணி அகாலி தள தலைவர் சுக்பீர் சிங் பாதல் ஆகிய தேசியத் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றிகள்!

அதுவும், தொடக்கத்திலிருந்தே இந்த முயற்சியில் என்னுடைய கரங்களை வலுப்படுத்திய பினராயி விஜயன், ரேவந்த் ரெட்டி, சித்தராமையா, டி.கே. சிவகுமார் ஆகியோருக்கும், தமிழ்நாட்டில் இருக்கிற நம்முடைய கொள்கைத் தோழமைகளான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றிகள்!

இப்போது நாம் பெற்றிருப்பது பாதி வெற்றிதான்! 2001ஆம் ஆண்டில் செய்தது போன்றே, இப்போதும் அடுத்த 25 ஆண்டுகளுக்கு, அதாவது 2051 வரை, தொகுதி எண்ணிக்கையை மறுவரையறை செய்வதைத் தள்ளி வைக்க அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும்!

அதுமட்டுமல்ல, பெண்களின் இடஒதுக்கீட்டிற்காக 2023 ஆம் ஆண்டே நாம் ஆதரித்து நிறைவேற்றிய சட்டத்தை எந்த நிபந்தனைகளும் இல்லாமல், பாஜக அரசு உடனடியாக இப்போது இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கே அமல்படுத்த வேண்டும். அதுதான் முழு வெற்றியாக அமையும்! அதற்காகப் போராடுவோம்!

மகிழ்ச்சியான இந்த நேரத்தில், இந்தத் தொகுதி மறுவரையறைச் சட்டம், யாரெல்லாம் நம் நண்பர்கள் என மட்டும் அடையாளம் காட்டவில்லை; தமிழ்நாட்டின் துரோகிகள் யார் என்று அவர்கள் வாயாலேயே சொல்ல வைத்திருக்கிறது. அப்படித் துரோகம் செய்த பழனிசாமியின் அடிமைக் கும்பலுக்குத் தேர்தலுக்கு முன்பே படுதோல்வி கிடைத்திருக்கிறது. பழனிசாமி டெல்லியின் ஏஜெண்ட் என்பது மீண்டும் நிரூபணமாகி யிருக்கிறது!

நம்முடைய திராவிட இயக்க வரலாறு என்ன? இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் முதல் சட்டத் திருத்தத்திற்குப் போராடி, இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்தது திமுக! எப்போதெல்லாம் இந்தித் திணிப்பு வருகிறதோ, அப்போதெல்லாம் உறுதியாகப் போராடி வென்றது திமுக!

அதே போன்றுதான், நேற்று தமிழ்நாட்டின் உரிமைகளை, பிரதிநி தித்துவத்தைத் தடுக்க நினைத்ததைப் போராடி வென்றிருக்கிறது திமுக! இந்தியாவே இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி உயர்வாகப் பேசுகிறது!

நம் வெற்றிகள் தொடரட்டும், தொடரும்! தமிழ்நாட்டு மக்களைச் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப் பார்த்த பாஜகவுக்கும், அவர்களுடைய ஏவல் அடிமைகளான அதிமுக வுக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மறக்கவே முடியாத மாபெரும் தோல்வியைக் கொடுப்போம்! இவ்வாறு ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.






# "மர்மமாக ஏதும் செய்ய போகிறீர்களா, புரட்சி வெடிக்க போகிறதா?" திமுகவுக்கு சரத்குமார் கேள்வி

விருதுநகர், ஏப்.19-
மர்மமாக ஏதும் செய்யப் போகிறீர்களா? புரட்சி வெடிக்கப் போகிறதா? என்று திமுகவுக்கு நடிகர் சரத்குமார் கேள்வி எழுப்பினார். விருதுநகர் தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் வி.ஜி.கணேசனை ஆதரித்து பாண்டியன் நகர் பகுதியில் நடிகரும் பாஜக தேசிய பொதுக்குழு உறுப்பினருமான சரத்குமார் நேற்று வாக்கு சேகரித்தார்.

தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பிரச்சாரத்துக்கு செல்லும் அனைத்து பகுதிகளிலும் மக்கள் எழுச்சியாக உள்ளதை பார்க்க முடிகிறது. ஆட்சி மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். இந்தத் தேர்தலில் வெற்றி உறுதியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தொகுதி மறுவரையறையை திமுக எதிர்க்கிறது. எங்களை மீறி செய்தால் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ஸ்டாலின் கூறியுள்ளார். 50 ஆண்டுகளுக்கு முன்னாள் இருந்த திமுகவை பார்க்க வேண்டியிருக்கும் என்று கூறியுள்ளார்.

50 ஆண்டுகளுக்கு முன்பு திமுக எப்படி இருந்தது என்று ஸ்டாலின் கூறினால் நாங்கள் பாதுகாப்பு கேடயத்தை தயாராக வைத்துக் கொள்வோம். இப்படி ஒரு கடிதத்தை பிரதமருக்கு முதல்வர் எழுதலாமா? போராட்டக்களமாக உருவாக்கி அனுதாப அலையை வீசச் செய்யத்தான் இதுபோன்ற போராட்டம். பொய் பிரச்சாரம் செய்யக் கூடாது.

தமிழகத்தில் தொகுதி எண்ணிக்கை 59 ஆக மாற்றப்படும் என்று கூறியுள்ளார்கள். எம்.பி.க்கள் எண்ணிக்கை குறையவில்லை, இம்மாறுதல் 2029 வரை இருக்காது என்றும் கூறியுள்ளார்கள்.

சீன லைட்டரை பயன்படுத்தக் கூடாது என்று கூறிவிட்டு, அதை பயன்படுத்தி நகலை எரிப்பது நியாயமா? ஜனநாயக நாட்டில் பிரதமருக்கு மிரட்டல் விடுக்கலாமா? மர்மமாக ஏதும் செய்யப்போகிறீர்களா? புரட்சி வெடிக்கப் போகிறதா? அப்படியெனில், தேச ஒற்றுமையை குலைக்கப் போகிறீர்கள். அப்படி என்றால் அது தேசப் பாதுகாப்பு சட்டத்துக்குள் வந்துவிடும்.

ஒற்றுமையை குலைக்கும் செயல்களை திமுக செய்கிறது. நிச்சயம் அதற்கு ஒரு காலம்வரும். தேர்தல் முடிந்தவுடன் இதைப்பற்றி பேச வேண்டியுள்ளது. முக கவர்ச்சி மட்டும் அரசியலுக்கு போதாது. களப்பணியாற்ற வேண்டும்.

41 பேர் இறந்ததற்கு காரணம் விஜய்தான். இறந்தவர்களின் குடும்பத்தினரை அழைத்து துக்கம் விசாரித்தவர் இவர்தான். விஜய் என்பவர் யார்? 10 நாட்களுக்கு அவரைப் பற்றி பேசாமல் இருந்து பாருங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# "உங்கள் சொந்த தொகுதியில் வெற்றி பெற முடியுமா?" செங்கோட்டையனுக்கு இபிஎஸ் சவால்

ஈரோடு, ஏப்.19-
"செங்கோட்டையன் எப்போது சிறுமையாக பேச ஆரம்பித்தாரோ, அப்போதே அவர் செல்வாக்கை இழந்துவிட்டார். முதலில் உங்களது சொந்த தொகுதியில் வெற்றி பெற முடியுமா எனப் பாருங்கள்?" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் சட்டப்பேரவைத் தொகுதி, கச்சேரி மேடு பகுதியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர், "செங்கோட்டையனை எம்எல்ஏ ஆக்க அதிமுக தொண்டர்கள் கடுமையாக



உழைத்தனர். அதிமுகவில் யாரையும் வளர விடாமல் செய்தவர். கட்சியில் இருந்து பலர் வெளியேற காரணமாக இருந்தவர் செங்கோட்டையன். இவர் மிக மோசமான ஆள்.

செங்கோட்டையன் மீது அவரது மனைவி, மகன் புகார் கூறியதால் அப்போது அமைச்சர் பதவி பறிக்கப்பட்டது. செங்கோட்டையனை மீண்டும் அமைச்சராக்கியது நான் செய்த தவறு. கண்ணீர் விட்டு கதறி அழுததால் அமைச்சர் பதவியை வழங்கினேன். செங்கோட்டையன் அவர்களே நான் எப்படிப்பட்டவன் என்று உங்களுக்கு தெரியாது. எனது ஒரு முகத்தைதான் நீங்கள் பார்த்து இருக்கிறீர்கள். இன்னொரு முகத்தை பார்த்தது இல்லை. நான், முதல்வர் ஸ்டாலின் கண்ணிலேயே கையை விட்டு ஆட்டியவன்.

அதிமுகவின் திட்டம் என்பதால் 'நடந்தாய் வாழி காவிரி' திட்டத்தை திமுக புறக்கணித்துள்ளது. அந்தத் திட்டத்திற்காக 5 ஆண்டுகள் அதிமுக போராடியது. விசில் அடிக்கும் கூட்டத்தில் இருந்தால் செங்கோட்டையனின் பேச்சு அப்படிதான் இருக்கும்.

செங்கோட்டையன் எப்போது சிறுமையாகப் பேச ஆரம்பித்தாரோ, அப்போதே அவர் செல்வாக்கை இழந்துவிட்டார். உங்களது சொந்தத் தொகுதியில் வெற்றி பெற முடியுமா என முதலில் பாருங்கள்.

அரசியல் ரீதியாக பேசுங்கள்; நான் அது குறித்து பதில் சொல்லத் தயார். ஆனால் தனிப்பட்ட முறையில் பேசினால் என்னிடம் நிறைய இருக்கிறது அவற்றை தொலைக்காட்சியில் போட்டு விடுவேன்.

பின்னர், நீங்கள் கோபியில் நடமாட முடியாது. நான் முதல்வராக இருந்தபோது யார் யார் என்ன செய்தார்கள் என்பது குறித்து எனக்குத் தெரியும். ஜாக்கிரதையாக இருங்கள். அரசியல் ரீதியாக அணுகுங்கள். செங்கோட்டையன் யாரையும் வளர விடமாட்டார். யாரவது நல்ல ஆடை அணிந்தால் கூட அவருக்கு பொறுக்காது. பணக்காரர்களை கண்டால் மட்டும்தான் பேசுவார்" இவ்வாறு பழனிசாமி தெரிவித்துள்ளார்.




# "சபரீசன் 'சூப்பர் சிஎம்' ஆக செயல்படுகிறார்" அண்ணாமலை குற்றச்சாட்டு

கோவை, ஏப்.19-
தமிழகத்தில் 'சூப்பர் சிஎம்' ஆக முதல்வர் ஸ்டாலினின் மருமகன் சபரீசன் செயல்படுகிறார் என அண்ணாமலை கூறினார். கோவை தெற்கு தொகுதியில் எம்எல்ஏ வானதிசீனிவாசன் மேற்கொண்ட சிறப்பு பணிகள் குறித்த தன்னார்வ அமைப்பின் ஆய்வறிக்கை வெளியீட்டு நிகழ்வு, கோவை கணபதியில் நேற்று நடந்தது.

நிகழ்வில் பங்கேற்ற பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை செய்தி யாளர்களிடம் கூறியதாவது: வானதி சீனிவாசன் கோவையின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் 5 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார்.

தற்போது நலமோடு களத்திற்கு வந்துள்ளார். கோவை தெற்கு தொகுதியில் அமுதம் திட்டம் மூலம் குழந்தை பெற்ற தாய்மார்கள் 2500 பேருக்கு பசும்பால் வழங்கினோம். இதம் திட்டம் மூலம் இலவச நாப்கின்கள் பெண்களின் வீடுகளுக்கே இலவசமாக வழங்கப்பட்டது.

சுயம் திட்டம் மூலம் 1500 பெண்களை தொழில் முனைவோர்களாக மாற்றி உள்ளோம். மோடி மகள் திட்டம் மூலம் தந்தை இல்லாத 150 பெண்களுக்கு கல்வி மற்றும் தீபாவளி பண்டிகையின் போது உடை, பட்டாசு உள்ளிட்டவை வழங்கப்பட்டன. வாட்டர் ஏடிஎம் மூலம் சுத்தமான தண்ணீர் தெற்கு தொகுதியில் வழங்கி உள்ளோம்.

கோவை வடக்கு தொகுதி எம்எல்ஏவாக அவர் வந்தால், இதுபோல பல திட்டங்களை கொண்டு வருவார். முதல்வர் ஸ்டாலினின் மருமகன் சபரீசன் செல்லும் இடங்களுக்கெல்லாம் அரசு அதிகாரிகள் உடன் செல்கிறார்கள்.

அரசு இயந்திரத்தை பயன்படுத்துகிறார். தோல்வி பயத்தால் இத்தனை நாட்கள் களத்துக்கு வராத சபரீசன் தற்போது வருகிறார். அவர் சூப்பர் சி.எம். ஆக செயல் படுகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

# "அன்புமணியை ஆதரிப்பது ஆபத்து" ராமதாஸின் மகள் ஸ்ரீகாந்தி சீற்றம்

விழுப்புரம், ஏப்.19-
ராமதாஸின் மகள் ஸ்ரீகாந்தி, 'செயல் தலைவராக இல்லை, ராமதாஸின் மகளாக பேசுகிறேன்' என்று ஆவேசமாக பேசினார். "எங்களைத் 'துரோகி' என்கிறார். முதல் துரோகியே அன்புமணிதான். கட்சி மற்றும் அப்பாவின் பொருளாதாரத்தை அபகரித்துச் சென்றவர் அன்புமணி.

கட்சியில் அனைத்தையும் அனுபவித்தது அன்புமணி. எங்களுக்கு அரசியல் ஆசை எதுவும் இல்லை. அப்பாவுக்கும், அம்மாவுக்கும் துணையாக இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் உள்ளோம்.

'அப்பாவுக்கு ஏதாவது ஆனால் தொலைத்து விடுவேன்' என்று அன்புமணி பேசுகிறார். நான் கேட்கிறேன், 'யாரை தொலைச்சுடுவ' சமூக வலைதளத்தில் என் அப்பாவை தவறாக சித்தரித்து, அவமதிக்கின்றனர். அவரின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

அப்பாவின் தனிப்பட்ட வாழ்க்கையை குறிப்பிட்டு விமர்சிப்பவர்களுக்கு பதவியைக் கொடுத்து,



அவர்களுடன் கட்டியணைத்து போட்டோ வெளியிடுகிறார். இவரெல்லாம் ஒரு பிள்ளையா?.

ஏதோ இப்போதுதான் 20 வயது பெண்ணை திருமணம் செய்துகொண்டு வந்தது போல் அப்பாவை கேவலப்படுத்தி வருகின்றனர். 45 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது. என் அம்மாவின் சம்மதத்துடன்தான் அனைத்தும் நடந்தது. என் அம்மாவுக்கு அனைத்து விஷயமும் தெரியும்.

குற்றச்சாட்டு சொல்வதற்கு வழி இல்லாததால், 'அந்த அம்மாவால்தான் எல்லாம் நடக்கிறது' என்று பொய் சொல்கிறார். அப்பாவைப் பற்றி கட்சியினர் மத்தியில் தவறான எண்ணத்தை உருவாக்கி இருக்கிறார். எந்த குடும்பத்தில்தான் இது நடக்கவில்லை. தனிப்பட்ட வாழ்க்கையை பேசுவதற்கு யாருக்குமே தகுதியில்லை.

'அக்கா' என்று கூட என்னைப் பார்க்காமல், கேவலமான பதிவு செய்கின்றனர். அன்புமணி சொல்லிதான் இது எல்லாம் நடக்கிறது. பணம், பதவிக்காக நாங்கள் இல்லை. அப்பா, அம்மாவை சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும் என்பதால் உடன் இருக்கிறோம்.

அப்பாவுக்கு உடல் நிலை பாதிக்கப்படுவதற்கு காரணமே அன்புமணிதான். அப்பாவை தனிமைப்படுத்த வேண்டும் என 10 ஆண்டுகளாக திட்டம் போட்டுள்ளனர். கூடவே இருந்தும் இதுஎங்களுக்கு தெரியவில்லை.

மறைந்த திமுக தலைவர் கருணாநிதியின் மகன் ஸ்டாலின் பொறுமையாக இருந்தது போல், உனக்கு பொறுமையாக இருக்க தெரியாதா..? 'எனக்கு அடுத்தது அன்புமணிதான்' என அப்பா ஏற்கெனவே கூறியிருக்கிறார். அதற்குள் உனக்கு என்ன அவசரம்? நல்ல பிள்ளையாக இருக்க முடியாதவர், எப்படி நல்ல தலைவராக இருப்பார். இவரை ஆதரிப்பது ஆபத்து" என்றார்.

# தமிழகத்தில் நடப்பாண்டில் நாய்க்கடியால் 2 லட்சம் பேர் பாதிப்பு: ரேபிஸ் தொற்றால் 13 பேர் உயிரிழப்பு

சென்னை, ஏப்.19-
தமிழகத்தில் நடப்பாண்டில் நாய்க்கடியால் 2 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ரேபிஸ் நோய் தொற்றால் 13 பேர் உயிரிழந்துள்ளனர். தமிழகம் முழுவதும் சுமார் 25 லட்சம் தெருநாய்கள் இருக்கலாம் என்று உத்தேச புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமே தெருநாய்களுக்கு ஓரளவு தடுப்பூசி போடப்படுகிறது. கிராமப்புறங்களில் நாய்களுக்கு எவ்விதத் தடுப்பூசியும் போடாததால், நகரப் பகுதிகளைவிட நாய்க்கடி பாதிப்பு கிராமப்புறங்களில் அதிகம் உள்ளன.

கடந்த 2025ம் ஆண்டில் நாய்க்கடியால் 6 லட்சத்து 25,700 பேர் பாதிக்கப்பட்டதில், 34 பேர் ரேபிஸ் நோய் தொற்று ஏற்பட்டு உயிரிழந்தனர். இந்நிலையில், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை 2 லட்சத்து 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

13 பேர் ரேபிஸ் நோய் தொற்று பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர். அதிகபட்சமாக சேலம் மாவட்டத்தில் 12,177, திருச்சியில் 9,939, திருவள்ளூரில், 9,265, திண்டுக்கல்லில் 8,239, விழுப்புரத்தில் 8,213 பேர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறும்போது, "நாய், பூனை, குரங்கு கடித்த காயங்களை முறையாக, கிருமிநாசினி கொண்டு தூய்மைப்படுத்தாமல் இருந்தால் தொற்று ஏற்படும். தடுப்பூசிகளை உரிய நேரத்தில் செலுத்தாமல் இருந்தால் ரேபிஸ் நோய் பரவுவதைத் தடுக்க முடியாது.

ஆழமான காயங்களுக்கு தடுப்பூசியுடன் சேர்த்து, ஆர்ஐஜி எனப்படும் ரேபிஸ் இன்யூனோகுளோபளின் தடுப்பு மருந்து செலுத்தலாம்.

முதல் நாள், மூன்றாவது நாள், ஏழாவது நாள் மற்றும் 21வது நாள் என 4 தவணைகளாக ரேபிஸ் தடுப்பூசி செலுத்த வேண்டும்.

இம்யூனோ குளோபளின் மருந்தானது முதல் நாளிலேயே ரேபிஸ் தடுப்பூசியுடன் செலுத்தப்பட வேண்டும். காலதாமதாகவோ அல்லது அதை மட்டும் தனியாகவோ செலுத்தினால் பலன் இல்லை. இதைக் கடைபிடித்தால் ரேபிஸ் நோய் தொற்றை தடுக்கலாம்" என்றனர்.

# அலுவலர்களாக உள்ள மத்திய அரசு ஊழியர்களுக்கு தமிழ், ஆங்கிலம் தெரியாததால் வாக்குப்பதிவு பணியில் சிக்கல் ஏற்பட வாய்ப்பு

சென்னை, ஏப்.19-
தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குச்சாவடி பணியில் தமிழ், ஆங்கிலம் தெரியாத மத்திய அரசு ஊழியர்களை நியமிப்பதால், வாக்குப்பதிவு பணியை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளதாக தேர்தல் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் 5.73 வாக்காளர்கள் உள்ளனர். தற்போது நடைபெற்று வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 4,023 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். வரும் ஏப்.23ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அதற்காக தமிழகம் முழுவதும் 75,064 வாக்குச்சாவடிகள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் பணியில் சுமார் 3.40 லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் 3 லட்சம் பேர் வாக்குச்சாவடி அலுவலர்களாக நியமிக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் உள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள், வாக்குச்சாவடியின் ஒட்டுமொத்தப் பொறுப்பாளர்களாக இருப்பர். வாக்குச்சாவடி அலுவலர்1, 2 மற்றும் 3 ஆகியோரும் பணியில்



இருப்பார்கள்.

இந்த தேர்தலில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மத்திய அரசின்கீழ் இயங்கும் கல்பாக்கம் அணுமின் நிலையம், ஆவடி படை உடை தொழிற்சாலை, கனரக வாகன தொழிற்சாலை, திருச்சி மற்று ராணிப்பேட்டையில் இயங்கும் பெல் நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் இதர மத்திய அரசு நிறுவனங்களில் பணியாற்றுவோர் வாக்குச்சாவடி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு 2 கட்ட பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஒரு வாக்குசசாவடி தலைமை அலுவலர் மற்றும் அவர்கள்கீழ் பணியாற்றும் 3 அலுவலர்கள் என குழு உருவாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான வாக்குச்சாவடிகள் இணைய குலுக்கல் முறையில் விரைவில் ஒதுக்கப்பட உள்ளன.

இந்நிலையில், மத்திய அரசு நிறுவன ஊழியர்கள் பலருக்கு இந்தி மட்டுமே நன்றாக தெரிந்திருக்கிறது. சிலருக்கு ஆங்கிலம் கூட தெரியவில்லை. வாக்காளர் பட்டியல் தமிழில் மட்டுமே அச்சிட்டு வழங்கப்படுகிறது.

இதனால், இவர்களை வாக்குச்சாவடி அலுவலர் 3ல் மட்டுமே நியமிக்க முடியும். ஒரு வாக்குச்சாவடியில் இதுபோன்ற ஊழியர்கள் 2 பேர் வந்துவிட்டால், வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பாடு திண்டாட்டம்தான்.

எனவே தமிழ் தெரியாதவர்களை தேர்தல் பணியில் ஈடுபடுத்துவதை தவிர்க்கலாம் என தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

# சென்னையில் எல்பிஜி காஸ் தட்டுப்பாடு: கடும் சிரமத்தை சந்திக்கும் ஆட்டோ ஓட்டுநர்கள்

சென்னை, ஏப்.19-
சென்னையில் ஆட்டோ எல்.பி.ஜி எரிவாயு கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஆட்டோ மற்றும் கால் டாக்ஸி ஓட்டுநர்கள் கடும் சிரமத்தை சந்திக்கின்றனர். பங்க்குகளில் காஸ் நிரப்ப 6 மணி நேரம் வரை காத்திருக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்தனர்.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் மற்றும் விநியோகச் சங்கிலி பாதிப்பு காரணமாக, எல்.பி.ஜி இறக்குமதி குறைந்துள்ளது. பற்றாக்குறையை சமாளிக்க மாற்று வழிகளை மத்திய அரசு ஆலோசிக்கிறது.

இதற்கிடையில், வாகனங்ளுக்கான எல்.பி.ஜி, சி.என்.ஜி எரிவாயு கிடைக்காததால், ஓட்டுநர்கள் கடும் சிரமத்தை சந்திக்கின்றனர். சென்னை நகரில் பல்லாயிரக்கணக்கான ஆட்டோக்கள், கால் டாக்சிகள் எல்.பி.ஜி. மற்றும் சி.என்



.ஜி எரிவாயுவை பயன்படுத்துகின்றனர். இதுபோல, அதிகரிக்கும் பெட்ரோல், டீசல் விலை உயர்வால் பலர் தங்கள் வாகனங்களின் கட்டமைப்பை எல்.பி.ஜி மற்றும் சி.என்.ஜி எரிவாயு மூலம் இயக்கும் வகையில் மாற்றி அமைத்துள்ளனர்.

இந்நிலையில், சென்னையில் ஆட்டோ எல்.பி.ஜி மற்றும் சி.என்.ஜி எரிவாயுக்கு கடந்த சில நாட்களாகவே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், நகரின் முக்கிய பகுதிகளான வடபழனி, எழும்பூர், சைதாப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் உள்ள எரிவாயு நிரப்பும் பங்க்குகள் மூடப்பட்டுள்ளன.

## 6 மணி நேரம் காத்திருப்பு

அதேநேரத்தில், திறந்திருக்கும் ஒரு சில பங்க்குகளில் கூட்டம் அலைமோதுகிறது. கீழ்ப்பாக்கம், மீனம்பாக்கம் உள்பட சில இடங்களில் காஸ்நிரப்புவதற்காக, நெடுந் தொலைவுக்கு வரிசையில் சுமார் 6 மணி நேரம் வரைகாத்திருந்தனர். குறிப்பாக, மீனம்பாக்கத்தில் உள்ள ஒரு பங்க்கில்காஸ் நிரப்ப சுமார் 3 கி.மீ. வரை ஆட்டோக்கள் அணிவகுத்து நின்றன.

இதுகுறித்து, ஆட்டோ ஓட்டுநர்கள் கூறியதாவது: சென்னையில் கடந்த சில நாட்களாக, எல்பிஜி காஸ் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. திறக்கப்பட்டுள்ள சில பங்க்குகளில், காஸ் நிரப்ப, காலை 6 மணி நேரம் வரை காத்திருக்கும் நிலை உள்ளது. காஸ் நிரப்பவே அதிக நேரம் செலவாவதால், சவாரி செல்வது குறைந்து அன்றாட வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ எல்.பி.ஜி காஸ்ல் 20 கி.மீ. வரை ஆட்டோ ஓடும். ஆனால், ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு 8 கி.மீ. வரை மட்டுமே செல்லும். இதனால், பெரும்பாலான ஆட்டோக்கள் எல்.பி.ஜி காஸ்க்கு மாறிவிட்டன. இப்போது 12 கிலோ கொள்ளளவு கொண்ட சிலிண்டர் ஆட்டோவில் பொருத்தப்பட்டுள்ளன.

பெட்ரோல் சுமார் 2 லிட்டர் வரை மட்டுமே பிடிக்கும். இதனால், எரிவாயுவை நம்பியே தொழில் செய்ய வேண்டியுள்ளது. நீண்ட நேரம் காஸ் நிரப்ப காத்திருக்க வேண்டியுள்ளதால், வாடகைக்கு ஆட்டோ எடுத்து ஓட்டுபவர்களின் நிலைமை மிகவும் பரிதாபமாக உள்ளது.

எனவே, பங்க்குகளில் எல்பிஜி காஸ் தட்டுப்பாடு இன்றி கிடைக்க மத்திய மாநில அரசுகள் வழிவகை செய்ய வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.




# வாசல் தோறும் 'விசில்' சின்னம்: ட்ரெண்டாகும் விஜய்யின் கோல வியூகம்

தவெக தலைவர் விஜய்யின் வேண்டுகோளை ஏற்று பெண்கள் வீட்டு வாசலில் 'விசில்' சின்னத்தை கோலமாக வரைந்து அதை வித்தியாசமான அரசியல் ட்ரெண்டாக்கி வருகின்றனர்.

தேர்தல் களத்தில் வேட்பாளர்களின் முகத்தை விட, அவர்கள் போட்டியிடும் கட்சிசார்ந்த சின்னமே வாக்காளர்களின் மனதில் ஆழமாகப் பதிய வேண்டும் என்பது அரசியல் கணக்கு. இதற்காகச் சுவர் விளம்பரங்கள், ஸ்டிக்கர்கள் எனப் பல உத்திகள் கையாளப்பட்டு வரும் நிலையில், விஜய் தனது கட்சியின் 'விசில்' சின்னத்தை மக்களிடம் பிரபல்யப்படுத்த நுணுக்கமான ஒரு வழியைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

நேற்று முன் தினம் சென்னையில் நடைபெற்ற தவெக தேர்தல் அறிக்கை வெளியீட்டு விழாவில் பேசிய விஜய், "தேர்தல் நெருங்கிவிட்டது. என் அன்புக்குரிய அம்மாக்கள், அக்காக்கள், தங்கை கள் அனைவரும் உங்கள் வீட்டு வாசலில் நமது 'விசில்' சின்னத்தை கோலமாக இடுங்கள். அது நீங்கள் எனக்குக் கொடுக்கும் மிகப்பெரிய ஆதரவாக இருக்கும்" என வேண்டுகோள் விடுத்தார்.

விஜய் இப்படி வேண்டுகோள் விடுத்த சில மணி நேரத்திலேயே, தமிழகம் முழுவதும் தவெக பெண் தொண்டர்கள் உற்சாகத்துடன் 'விசில்' சின்னத்தை வீட்டு வாசலில் கோலமாக வரைந்தனர். தமிழகம் முழுவதும் ஆயிரக் கணக்கான வீடுகளின் வாசலில் வண்ணமயமான 'விசில்' கோலங்கள் மின்னத் தொடங்கின. மேலும், கோலத்தின் கீழே 'எங்கள் ஓட்டு விசில் சின்னத்துக்கே' என வாசகங்களை கோல மாவில் எழுதியும் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

தொடர்ந்து, நேற்று காலை முதல் தமிழகத்தின் மூலை முடுக்கெங்கும் இடப்பட்ட இந்த 'விசில்' கோலங்கள், புகைப்படங் களாகவும் வீடியோக்களாகவும் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றன. வீட்டு வாசலில் இடப்படும் கோலம் என்பது தமிழர்களின் கலாசாரத்துடன் ஒன்றிய ஒன்று. அதைத் தேர்தல் பிரச்சார உத்தியாக விஜய் மாற்றியிருப்பது அரசியல் களத்தில் இயங்கும் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இந்நிலையில், நேற்று மாலை பெரம்பூரில் உள்ள தவெக தேர்தல் பணிமனைக்கு விஜய் திடீரென வருகை தந்தார். அங்கிருந்த பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்த அவர், பின்னர் நிர்வாகிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். அப்போது, பெண் நிர்வாகிகளின் வேண்டுகோளை ஏற்று, பணிமனை வாசலில் பெண்களுடன் சேர்ந்து 'விசில்' சின்னத்தை கோலமாக வரைந்து வாக்குச் சேகரித்தார்.

## மொடக்குறிச்சி தொகுதி வேட்பாளர் தீவிரவாக்கு சேகரிப்பு


■ அஇஅதிமுக கூட்டணியில் பாஜகவின் மொடக்குறிச்சி தொகுதி வேட்பாளர் திருமதி. கிருத்திகா சிவக்குமார் அவர்கள் தாமரை சின்னத்தில் கிளாம்பாடி, வெள்ளோட்டம் பரப்பு, நடுப்பாளையம் ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்...

# மதுரை பாண்டி கோயிலை கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டும்: அறநிலையத் துறைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

மதுரை, ஏப்.19-

மதுரை பாண்டி கோயிலை முழுமையாக இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் எடுக்கவேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மதுரை பாண்டி கோயில் பரம்பரை பூசாரி உரிமை தொடர்பாக அறநிலையத் துறை பிறப்பித்த பல்வேறு உத்தரவுகளுக்கு எதிராக கோயில் பூசாரிகள் வழக்கு தொடர்ந்தனர்.



இதில் தனி நீதிபதி 2024ல் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக்கோரி சீதாலெட்சுமி, தனம், பாண்டீஸ்வரி, ஆர்த்தி, ஜெகதீஸ் பாண்டியன் ஆகியோர் உயர் நீதிமன்ற அமர்வில் மேல்முறையீடு செய்தனர்.

இதை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு விசாரித்தது. பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: மதத்தை செல்வம் சேர்க்கும் போர்வையாக கருதக் கூடாது. பண பலனுக்காக பக்தியை வளர்க்கவும் முடியாது.

மதுரையின் காவல் தெய்வமாகப் போற்றப்படும் பாண்டி முனீஸ்வரர் கோயில் பூசாரிகள், கடவுளுக்குச் சேவை செய்யாமல் தங்களின் சொந்த ஆதாயத்துக்காகவும், ஆடம்பர வாழ்வுக்காகவும் பக்தர்களின் தட்டு காணிக்கையையும், உண்டியல் வசூலையும் பிரிப்பதற்காக தங்களுக்குள் சண்டையிடுகின்றனர். இப்பிரச்சினையால் ஏராளமான வழக்குகள் தொடரப்பட்டு மதச் சூழல் மாசுபடுத்தப்பட்டுள்ளது.

கோயில் நிர்வாகத்தில் முறைகேடுகள் நடப்பதை அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர். இந்த கோயிலில் தட்டு வசூல் ஆண்டுக்கு ரூ.1 கோடியை தாண்டுவதாகவும், உண்டியல் வசூல் ஆண்டுக்கு குறைந்தது ரூ.4 கோடி வரை இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த பணம் கோயில் கணக்கில் வரவு வைக்காமல் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்டியல் வசூல் பூசாரியின் தனிப்பட்ட உரிமை அல்ல.

அது பக்தர்களின் நம்பிக்கையால் குவியும் பொதுவான வளம். அந்த வளத்தை தங்களின் குடும்ப சொத்தின் வருமானம் என்பது போல் பங்கு கேட்டு சண்டையிடுவது வேதனையானது.

அர்ச்சகர் வாழ்வாதாரத்துக்காக உண்டியல் வசூலில் ஒரு தொகை வழங்குவது வாரிசுரிமை அளிக்காது. இந்த வழக்கில் தனி நீதிபதியின் உத்தரவில் தலையிட முடியாது. இந்த வழக்கின் மேல்முறையீட்டு மனுதாரர்கள் உட்பட தனி நபர்கள் யாரும் கோயிலில் பரம்பரை பூசாரியாக உரிமை கோர முடியாது.

பரம்பரை அறங்காவலர்களை நீக்குவது தொடர்பாக அறநிலையத் துறை 4 வாரத்தில் முடிவெடுக்க வேண்டும். கோயில் நிர்வாகத்தை முழுமையாக அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டும். மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன.




# உதயநிதி வென்றால் நான் வெற்றி பெற்றதாக அர்த்தம்: கமல்ஹாசன் நெகிழ்ச்சி

சென்னை, ஏப்.19-

"சட்டப்பேரவைத் தேர்தலில் உதயநிதி ஸ்டாலின் வென்றால் நான் வெற்றி பெற்றதாக அர்த்தம்" என்று மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்தார்.

திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மநீம தலைவர் கமல்ஹாசன் சென்னையில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார். சென்னையில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடும் துணை முதல்வர் உதயநிதியை ஆதரித்து அவர் பேசியதாவது: தமிழகம் வெல்லவேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கு வந்துள்ளேன். எனக்கு மக்கள் குணம் தெரியும். இதே ஆட்சி அமைய வேண்டும் என்பது நமது விருப்பம். முக்கியமாக என் விருப்பம்.

நாட்டில் நிலவும் அரசியல் சூழலில், உங்கள் வாக்கு தமிழகத்துக்கு மட்டுமானதல்ல. நாட்டுக்கானதும் தான். தமிழகமே, இப்போது தனிக் கோட்டையாக நின்று இந்தியாவுக்காக சண்டை போட்டுக் கொண்டிருக்கிறது. அதில் முன்னணியில் நிற்கும் வீரர் துணை முதல்வர் உதயநிதி என்றால் மிகையாகாது. அவருடைய பேரைச் சொல்லும்போது குதூகலம் உருவாகிறது. நான் இதற்கு முன்னாடி இதே வீதிகளில் வந்திருக்கிறேன்.

அன்று பார்த்ததைவிட தற்போது சிறப்பாக இருக்கிறது. மேலும், இங்கே கூடியிருக்கும் மநீம தொண்டர்கள் ஆதாயத்துக்காக அல்ல. நாளை தமிழகம் சிறக்க வேண்டும் என்பதற்காகவே வந்துள்ளனர்.

சாதனை என்பது சொல்வதல்ல. பேசிக்கொண்டே இருப்பதல்ல. செய்துகாட்டுவதுதான். அந்த வகையில் சாதனையைச் செய்து காட்டிய இடத்துக்கு நான் இன்று வந்திருக்கிறேன். இனியும் இது சிறப்பாகும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

உலக அரங்கில் தமிழகத்தின் விளையாட்டு வீரர்கள் தெரிய ஆரம்பித்து இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம், உதயநிதி தான். அவர் மீண்டும் இந்த தொகுதியில் எம்எல்ஏவாக வரவேண்டும். அவரை வெல்ல வைப்பது என்னை வெற்றிபெற வைப்பது போலாகும். தமிழகம் ஜெயித்தால், நாம் எல்லோரும் ஜெயித்தது போல் தான். இவ்வாறு அவர் பேசினார்.


■ ஈரோடு கிழக்கு தொகுதி வெற்றி வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் அவர்கள் மரப்பாலம் பகுதிக்கு உட்பட்ட ஜீவானந்தம் நகர் மற்றும் மஜீத் வீதி ஆகிய இடங்களில் வாக்கு சேகரித்த போது உடன் பெண்கள் ஆரத்தி எடுத்தனர்



■ ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் செந்தில்நாதன் மொடக்குறிச்சி மற்றும் வட்டார பகுதியான நஞ்சை ஊத்துக்குளி லக்காபுரம் சோலார் ஆகிய பகுதிகளில் வாக்கு சேகரித்த போது உடன் குறிஞ்சி முன்னேற்ற பேரவையின் மாநில தலைவர் குறிஞ்சி பா சந்திரசேகரன் உடன் இருந்தார்

## தூத்துக்குடி மாவட்டத்தில் பறக்கும் படையினரால் இதுவரை ரூ.1.23 கோடி பறிமுதல்: மாவட்ட ஆட்சியர் தகவல்!

தூத்துக்குடி, ஏப்.19-

தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள நிலையில், தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை ரூ.5,62, 282 மதிப்பிலான மதுபானங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள நிலையில், தூத்துக்குடி மாவட்டத்தில் பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று (17.4.2026) வரை பறக்கும் படையினரால் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் பொருட்களின் விவரங்கள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது: பறிமுதல் செய்யப்பட்ட மொத்த ரொக்கம்: ரூ.1 கோடியே 23 லட்சத்து 518. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு: ரூ.16 லட்சத்து 12 ஆயிரத்து 162. பறிமுதல் செய்யப்பட்ட மது பானங்களின் மதிப்பு: ரூ.5 லட்சத்து 62 ஆயிரத்து 282.

தேர்தல் விதிமீறல்களைக் கண்காணிக்கவும், வாக்காளர்களுக்குப் பணம் மற்றும் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதைத் தடுக்கவும் கண்காணிப்புப் பணிகள் தொடர்ந்து தீவிரப்படுத்தப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


■ திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் சதீஷ் கிறிஸ்டோபர் அவர்களுக்கு திசையன்விளை நகர செயலாளர் கில்லிராஜா அவர்கள் தலைமையில் விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்த போது...


■ கோபி சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெற்றி வேட்பாளர் நல்ல சிவத்தை ஆதரித்து வாக்கு சேகரித்தார்.

## ஏப்ரல் 23ல் இவ்வளவு சிக்கலா? கண்டிப்பாக ஓட்டு போட்டுருங்க

சென்னை, ஏப்.19-

தேர்தல் நாளான ஏப்ரல் 23ஆம் தேதி(வியாழக்கிழமை) தமிழ்நாடு சட்டமன்றத்தின் 234 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 2026 ஆம் ஆண்டில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் ஆகும். அதேநேரம் தேர்தல் நடைபெறவுள்ள ஏப்ரல் 23ஆம் தேதி இந்த ஆண்டின் மிக முக்கிய சுபமுகூர்த்த நாள். சுபமுகூர்த்த நாளில் தான் வாக்குப்பதிவும் நடைபெறவுள்ளது .

ஜனநாயக கடமையாற்றும் அந்த முக்கியமான நாளன்று சுபமுகூர்த்த தினமும் ஆகும், மேலும் இது இந்த வருடத்தின் மிக முக்கியமான வளர்ப்பறை சுபமூர்த்த நாள், இதனால் ஆறு மாதத்திற்கு முன்பே ஏப்ரல் 23ஆம் தேதியை பலரும் முகூர்த்தநாளாக குறித்திருப்பர்.

காதுகுத்து, திருமணம் மற்றும் கிரஹப்பிரவேசம் என பல விஷேசஷங்களுக்கு அன்று நாள் குறித்திருப்பர்.எனவே அனைத்து வேலைகளையும் தொடங்கி இருப்பார். இந்நிலையில் தமிழ்நாட்டு சட்டமன்ற தேர்தலை ஏப்ரல் 23ல் அறிவித்து தேர்தல் ஆணையம் ஷாக் குடுத்தது.எனவே மக்கள் விசேஷங்களுக்கு செல்வார்களா அல்லது வாக்கு சாவடிக்கு செல்வார்களா? திருமண நிகழ்ச்சிகள் வாக்குப்பதிவை பாதிக்குமா?

அதே போல் அன்று தான் கங்காசப்தமி, பத்தாம் உதயம் மற்றும் கிராம திருவிழாக்கள் என பல விஷேசஷங்கள் இருக்கின்றன, அதனால் மக்கள்கள் அந்த கொண்டாட்டத்தில் இருப்பார்களா அல்லது வாக்கு பதிவு செய்ய செல்வார்களா? கடந்த 2021 தேர்தலிலே 73.63% வாக்கு பதிவான நிலையில் இப்போது இந்த சூழ்நிலையில் வாக்கு சதவீதம் குறைய அதிக வாய்ப்புள்ளது.

இதில் ஒரு சுவாரசியம் என்னவென்றால் கல்யாணமான புதுமண தம்பதிகள் மாலை கழுத்துடன் வாக்கு சாவடிக்கு வந்து தங்களது வாக்குகளை பதிவு செய்வர். தேர்தல் நாளானது மக்களாகிய நமக்கான நாள், எனவே அன்று ஜனநாயக கடமையாற்ற வாக்குச்சாவடிக்கு சென்று உங்களது வாக்குகளை செலுத்த வேண்டும். உறவுகளும் முக்கியம் கலாச்சாரமும் முக்கியம் அதைவிட முக்கியமானது உங்கள் ஜனநாயக கடமையை செலுத்துவது அதனால் நீங்கள் உங்கள் ஓட்டை மறக்காமல் செலுத்துங்கள்.



# 100 சதவீதம் வாக்களிக்க கோரி படகில் பயணம் செய்து கலெக்டர் விழிப்புணர்வு

திருப்பூர், ஏப்.19-

சட்டமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஆண்டிபாளையம் படகு இல்லத்தில் படகில் பயணம் செய்து மாவட்ட கலெக்டர் மனிஷ் தொடங்கி வைத்தார். இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட தாராபுரம் (தனி), காங்கயம், அவிநாசி (தனி), திருப்பூர் (வடக்கு), திருப்பூர் (தெற்கு), பல்லடம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெற உள்ளது.

இதற்காக மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் நேற்று ஆண்டிபாளையம் படகு இல்லத்தில் மாவட்ட கலெக்டர் மனிஷ் படகில் பயணம் செய்து தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்க கோரி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சங்கமித்திரை, சுற்றுலா அலுவலர் அரவிந்த்குமார், விளையாட்டு அலுவலர் ரகுக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி இயக்குநர் (பயிற்சி) ஹர்சா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.


■ இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவின்படி, புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, அரசு மகளிர் கலைக் கல்லூரியில் அமைக்கப்பட்டு வரும் வாக்கு எண்ணும் மையத்தில், பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் உள்ளிட்ட முன்னேற்பாடு பணிகள் குறித்து, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



## உடுமலையில் திமுகவின் ‘மெகா’ டூவீலர் பேரணி: உதயசூரியன் மு.ஜெயக்குமார் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு

திருப்பூ, ஏப்.19-

திருப்பூர் மாவட்டம் உடுமலை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் உடுமலை ஜெயக் குமார் உடுமலை நகரப் பகுதிகளில் டூவீலர் பேரணியுடன் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தார்.

உடன் நகரக் கழக செயலாளர் வேலுச்சாமி, நகரமன்ற தலைவர் மத்தின், 24 வது வார்டு பொறுப்பாளர்கள் அயுப்செரிப் வார்டு செயலாளர், மரக்கடை முருகன், ஆசைத்தம்பி, சாரங்கபாணி, நரேந்திரன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் யு.என்.பி குமார், நகர மன்ற உறுப்பினர்கள் சார்பு அணி பொறுப்பாளர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் இணைந்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

## “வெற்றி நமதே!” எடப்பாடியைச் சந்தித்து பாமக வேட்பாளர் சதாசிவம் தீவிர ஆலோசனை

சேலம், ஏப்.19-

சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி பாமக வேட்பாளர் சதாசிவம், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்களை நெடுஞ்சாலை நகரிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். தொகுதி வெற்றி வாய்ப்புகள் மற்றும் தேர்தல் பணிகள் குறித்து விரிவாக ஆலோசனை செய்த எடப்பாடியார், சதாசிவம் அவர்களுக்குத் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.



ஆலோசனைக்குப் பின் செவ்வாய்பேட்டை பகுதியில் வாக்கு சேகரித்த சதாசிவத்திடம், நூற்றுக்கும் மேற்பட்ட சுமைதூக்கும் தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கைகளை முன்வைத்தனர். “வெற்றி பெற்றவுடன் உங்கள் பிரச்சினைகள் போர்க்கால அடிப்படையில் தீர்க்கப்படும்“ என அவர் உறுதி அளித்தார்.

தொடர்ந்து டவுன் ஜாமியா மசூதிக்குச் சென்ற அவர், இஸ்லாமியப் பெருமக்களைச் சந்தித்து மாம்பழம் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார். அதிமுகபாமக கூட்டணி இஸ்லாமியர்களுக்காக அறிவித்துள்ள நலத்திட்டங்களை அவர் விரிவாக எடுத்துரைத்தார்.




## “நான் உங்கள் வீட்டுப் பிள்ளை; கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவேன்!” சங்கரன்கோவிலில் டாக்டர் திலீபன் ஜெய்சங்கர் உருக்கம்!

தென்காசி, ஏப்.19-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் திருவுடையான் சாலை ஒன்றாவது தெருவில் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி ஆ.இ.அ.தி.மு.க வேட்பாளர் டாக்டர் திலீபன் ஜெய்சங்கர் பிரச்சாரம் மேற்கொண்டார். முன்னாள் முதல்வர் எடப்பாடியார் அளித்த வாக்குறுதி வீடு இல்லாத ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும், அனைத்து குடும்ப அட்டைதாரருக்கும் பிரிட்ஜ் இலவசமாக வழங்கப்படும், வருடத்துக்கு மூன்று சிலிண்டர் இலவசமாக, பெண்களுக்கு ஸ்கூட்டர்க்கு 25,000 மானியம், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதம் ரூ.2000, ரேஷன் கடைகளில் தரமான அரிசி பருப்பு ஆயில் இலவசமாக, ஆ.இ.அ.தி.மு.க அரசு ஆட்சி அமைத்ததும் அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.10000, பெண்களுக்கு முழு பாதுகாப்பு, கஞ்சா போதைப் பொருள்கள் மது முற்றிலும் ஒழிக்கப்படும் என்றும், சட்ட ஒழுங்கு பாதுகாக்கப்படும் என்றும் கூறினார்.



இப்பிரச்சாரத்ததில் சங்கரன்கோவில் தொகுதி மக்களுக்கு அரசு மருத்துவமனையை மாவட்ட அளவிலான உயர்ந்த தர மருத்துவமனையாக மாற்றி அமைத்து சாலை வசதி சீர் செய்யப்படும் எனவும், நெசவாளர் வாழ்க்கை தரம் உயர்த்தப்படும் எனவும், வேலையில்லா இளைஞர் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் எனவும், அம்மா உணவகம் தரம் உயர்த்தி வழங்கப்படும் என்றும் கூறினார்.

மேலும், நான் உங்கள் வீட்டுப் பிள்ளை சங்கரன்கோவில் தொகுதி மக்களுக்காக வாழ்நாள் முழுவதும் பணி செய்ய காத்திருக்கிறேன் எனவும் நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவேன் என பிரச்சாரம் செய்து உங்கள் ஓட்டு நமது சின்னம் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து என்னை அமோக வெற்றி பெற செய்யுங்கள் என தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு நன்றி வணக்கம் உடன் நிறைவு செய்தார்.

இப்பிரச்சாரத்தில் அ.இ.அ.தி. முன்னேற்றக் கழகத்தின் வார்டு செயலாளர்கள் வார்டு கவுன்சிலர்கள் மற்றும் கூட்டணி கட்சி பாஜக அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் மற்றும் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் போன்ற அனைத்து கூட்டணி கட்சியை நிர்வாகிகள் கழக இளைஞர் அணி தொண்டர்களும் பெருமக்களும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## “என் பெயர் ஒரு பிராண்ட்... உங்கள் குடும்பம் இல்லையென்றால் நீங்கள் யார்?” பிடிஆருக்கு சுந்தர்.சி கேள்வி

மதுரை, ஏப்.19-

குடும்பத்தின் பெயரை பிராண்ட் ஆக வைத்துக்கொண்டு நான் இங்கு தேர்தலில் நிற்கவில்லை. என்று மதுரை மத்திய தொகுதி அதிமுக கூட்டணி வேட்பாளர் சுந்தர்.சி தெரிவித்தார்.

மதுரை தைக்கால் தெரு, அனுமார் கோவில் படித்துறை, பொன்னகரம் உள்ளிட்ட இடங்களில் அதிமுக கூட்டணியின் புதிய நீதிக்கட்சி வேட்பாளர் சுந்தர்.சி பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசுகையில், பழநியில் என் பாட்டி இட்லி விற்று 4 பசங்களை வளர்த்தார்.

அப்படி வளர்க்கப்பட்டு அரசாங்க வேலைக்கு சென்றவர்தான் என் அப்பா. சராசரி குடும்பத்தில் பிறந்து தனி மனிதனாக சென்னை சென்று சினிமா துறையில் போராடி இந்த நிலைக்கு வந்துள்ளேன்.சுந்தர்.சி என்ற என் பெயரை சொன்னால் தமிழகத்துக்கு ஓரளவு தெரியும் அளவுக்கு பிராண்ட் ஆக உருவாகியுள்ளேன்.

இது எனது தனிப்பட்ட உழைப்பு. குடும்பப் பெயரை வைத்துக்கொண்டு 25 ஆண்டுகள் அமெரிக்காவிலும், லண்டனிலும் படித்து குடும்பத்தின் பெயரை சொல்லி மட்டுமே எம்எல்ஏ சீட் பெற்று இங்கே வந்து தேர்தலில் நிற்கவில்லை.

ஒரு வெளிநாட்டுக்காரனாக நான் தேர்தலில் இல்லை. குடும்பத்தின் பெயரை பிராண்ட் ஆக வைத்துக்கொண்டு நான் இங்கு தேர்தலில் நிற்கவில்லை. பழனிவேல் தியாகராஜனுக்கு அவரது பெயருக்கு முன்னால் இனிஷியலை போட்டால்தான் அவரை யார் என்று தெரியும்.

அவரது பிராண்ட் ஜீரோ. அந்த குடும்பத்தில் உள்ள முன்னோர்கள் பண்பாளர்கள். மிகப்பெரிய நல்ல காரியங்களை செய்துள்ளனர். நான் அவர்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

அப்படி பெரிய குடும்பத்தில் இருந்து வந்தவர்கள் இப்படியா பேசுவார்கள். அவரது இந்த பேச்சால், தோல்விக்கான முதல் படியில் அவரும், வெற்றிக்கான முதல் படியில் நானும் நிற்கிறேன் என்பதுதான் உண்மை.

மக்கள் அவரது வீட்டுக்குச் சென்று குறைகளை சொல்ல முடியுமா? ஒரு அமைச்சர், மெட்ரோ, மேம்பாலம், குடிநீர் திட்டம் போன்ற திட்டங்களை தன்னுடைய சாதனைகளாக சொல்லவேண்டும். அப்படி இவர் என்ன செய்துள்ளார். இவ்வாறு அவர் பேசினார்.




## அரசு கல்லூரி மற்றும் பஸ் வசதி: ஏழை மாணவர்களின் கல்விக்கு உறுதியளித்த மருத்துவர் பாலமுருகன்!

அலங்காநல்லூர். ஏப்.19-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு பகுதிகளில் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சோழவந்தான் தொகுதி வேட்பாளர் மருத்துவர் பாலமுருகன், கிராமம் கிராமமாக சென்று பொதுமக்களிடம் தென்னந்தோப்பு சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். சத்திர வெள்ளாளப்பட்டி கிராமத்தில் வாக்கு சேகரித் தவர் அங்கு அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து பேசிய அவர் என்னை வெற்றி பெறச் செய்தால் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி தருவேன் தொடர்ந்து இப்பகுதிகளில் அரசு கல்லூரி பஸ் வசதி குடிநீர் மின்சாரம்,கிராமம் தோறும் வாரம் ஒரு முறை மக்களுக்கு மருத்துவ முகாம் நடத்தப்படும்.ஏழை எளிய மாணவ மாணவியர் கல்வி கற்க தேவையான உதவிகள் அனைத்தும் செய்து தரப்படும் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து மறவப்பட்டி, ராஜக்கல்பட்டி, வலையபட்டி, அரசம்பட்டி, கொழிஞ்சிபட்டி, தெத்தூர், தெ.மேட் டுப்பட்டி, பாலமேடு ஆகிய பகுதிகளுக்கு சென்று தென்னந்தோப்பு சின்னத் திற்கு வாக்கு சேகரித்தார் தொடர்ந்து கட்சி நிர்வாகிகள் அவருக்கு மலர் தூவி வரவேற்று கைத்தறி ஆடைஅணிவித்தனர்.

இதில் நிர்வாகிகள் பண்ணைகுடி மைனர் ராமச் சந்திரன், முருகன், செல்லப்பாண்டி, முத்தரசன், சமயநல்லூர் சேர்வை, பாட்டாளி மக்கள் கட்சி (ராமதாஸ் அணி) மாவட்ட அமைப்பு செயலாளர் அழகுராஜ், மாவட்ட துணைச் செயலாளர் முடுவார்பட்டி பிரபு, ஒன்றிய செயலாளர் முருகன், ஒன்றிய தலைவர் பாஸ்கரன், மகளிரணி காயத்ரி, உள்பட பலர் கலந்து கொண்டனர்..



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, சேலம் மாவட்டம், ஓமலூர் காமராஜர் நகர் பகுதியில் வாக்காளர்களுக்கு பூத்சிலிப் வழங்கப்பட்டு வரும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.


## திருப்பூர் ரேவதி மெடிக்கல் சென்டரில் முதல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றி! இனி கோவை, ஈரோடு செல்ல வேண்டிய அவசியமில்லை!

திருப்பூர் ஏப்.19-

திருப்பூர் மாநகரில் மருத்துவத் துறையில் ஒரு புரட்சிகரமான மைல்கல்லாக, ரேவதி மெடிக்கல் சென்டர் தனது முதல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை (Kidney Transplant) வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளது.

வெற்றிகரமான அறுவை சிகிச்சை:

சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்ட நோயாளிக்குச் செய்யப்பட்ட இந்த அறுவை சிகிச்சைக்குப் பின் நோயாளியின் கிரியேட்டினின் அளவு இயல்பு நிலைக்குத் திரும்பியதை அடுத்து, அவர் நலமுடன் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார். திருப்பூர் மாவட்டத்திலேயே முழுமையான சிறுநீரக சிகிச்சை சேவைகள் வழங்கப்படுவதற்கான ஒரு முக்கியமான தொடக்கமாக இது பார்க்கப்படுகிறது.




சிரமங்களுக்கு முற்றுப்புள்ளி:

இதுவரை திருப்பூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சைக்காகக் கோயம்புத்தூர் அல்லது ஈரோடு போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இதனால் நீண்ட பயண நேரம், உடல் சோர்வு, கூடுதல் மருத்துவச் செலவுகள் மற்றும் உறவினர்கள் தங்குவதில் சிரமங்கள் இருந்து வந்தன. தற்போது ரேவதி மெடிக்கல் சென்டரில் உயர்தர சிகிச்சை கிடைப் பதன் மூலம் இந்தச் சிக்கல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

சாதனை படைத்த மருத்துவக் குழு:

இந்தத் திட்டத்தை முன்னிலை வகித்துச் செயல்படுத்திய சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஹரிஷ் சிவஞானம், அவருக்கு உறுதுணையாகச் சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் ஸ்ரீ ஹரி பிரசாத் மற்றும் டாக்டர் தியாகராஜன் ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழுவின் ஒருங்கிணைந்த முயற்சியால் இந்த வெற்றி சாத்தியமாகியுள்ளது.

இயக்குநரின் தொலை நோக்குப் பார்வை:

ரேவதி மெடிக்கல் சென்டர் இயக்குநர் டாக்டர் ஈஸ்வரமூர்த்தி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், இந்த மருத்துவமனை உலகத்தரம் வாய்ந்த சிகிச்சைகளை எளிய மக்களும் அணுகக்கூடிய குறைந்த கட்டணத்தில் வழங்கி வருகிறது. இது குறித்து அவர் பேசுகையில், “இது வெறும் ஒரு அறுவை சிகிச்சை அல்ல; திருப்பூரில் சிறுநீரக சிகிச்சைக்கான ஒரு புதிய யுகத்தின் தொடக்கம்“ என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000